நிமிர்ந்த நன்னடை நேர்கொண்ட பார்வை
தினமணி
நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறிகள்

## முட்டைக் கோழி விலை ஒரு கிலோ ரூ.40; பண்ணையாளர்கள் மகிழ்ச்சி

First Published : 31 Mar 2011 11:27:07 AM IST

நாமக்கல், மார்ச் 30: கறிக்கோழியின் விலை ஏற்றம் காரணமாக முட்டைக் கோழியின் விலை ஒரு கிலோ ரூ.40 ஆக உயர்ந்துவிட்டது. இதனால் நாமக்கல் முட்டைக் கோழி பண்ணையாளர்கள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

÷பல்லடம் பகுதியில் கறிக்கோழி பண்ணைகள் அதிக எண்ணிக்கையில் உள்ளன. கடந்த 2010-ம் ஆண்டு செப்டம்பர், அக்டோபர் மாதங்களில் கறிக்கோழி விலை வீழ்ச்சி அடைந்தது. அதைத் தொடர்ந்து, கறிக்கோழிகளின் உற்பத்தியைக் கட்டுப்படுத்தும் நடவடிக்கையை பல்லடம் பகுதியில் உள்ள பண்ணையாளர்கள் ஈடுபட்டனர். இதன் விளைவாக தற்போது கறிக்கோழிகளுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. தற்போது கறிக்கோழியின் பண்ணை விலை ரூ.75 ஆக உயர்ந்துள்ளது.

÷இந் நிலையில், பெரும்பாலான சில்லரை கறிக்கோழி வியாபாரிகள் தங்களது கவனத்தை முட்டைக் கோழியின் பக்கம் திருப்பியுள்ளனர். இதன் காரணமாக முட்டைக் கோழிக்கான தேவை உயர்ந்துள்ளது. அதன் விலையும் அதிகரிக்க தொடங்கியுள்ளது. இம் மாத தொடக்கத்தில் முட்டைக் கோழி ஒரு கிலோ ரூ.27 ஆக இருந்தது. தற்போது விலை படிப்படியாக அதிகரித்து, ரூ.40 ஆக உயர்ந்துவிட்டது. இந்த விலைக்கு குறைவாக முட்டைக் கோழிகளை விற்பனை செய்ய வேண்டாம் என நாமக்கல் மண்டல தேசிய முட்டை ஒருங்கிணைப்புக் குழு வேண்டுகோள் விடுத்துள்ளது.

÷இதுகுறித்து கோழிப் பண்ணையாளர்கள் கூறியது:

÷கோடை காலத்தில் கோழிகளின் தீவன எடுப்பு வெகுவாகக் குறைந்து காணப்படும். இதனால் கோழிகளின் எடை பெருமளவு குறைந்துவிடும். மேலும், வெப்ப அயற்சி காரணமாக கோழிகள் இறக்க நேரிடும். எனவே, ஆண்டுதோறும் கோடை காலத்தில் கறிக்கோழி விலை உயரும். தற்போது கறிக்கோழிகளுக்கு தட்டுப்பாடு நிலவுவதால் முட்டைக் கோழியின் விலையும் அதிகமாகியுள்ளது. இதனால் முட்டைக் கோழி தொழிலில் கிடைக்கும் லாபமானது அதிகமாகி வருகிறது. இந்த விலையேற்றம் மகிழ்ச்சி அளிப்பதாக இருக்கிறது. முட்டைக் கோழியின் விலை மேலும் அதிகரிக்க வாய்ப்புள்ளது என்றனர்.

**முட்டை விலை**

First Published : 31 Mar 2011 11:25:26 AM IST

நாமக்கல், மார்ச் 30: நாமக்கல் மண்டல தேசிய முட்டை ஒருங்கிணைப்புக் குழு புதன்கிழமை அறிவித்த முட்டையின் பண்ணைக் கொள்முதல் விலை முட்டை ஒன்றுக்கு நாமக்கல்லில் ரூ.2.20, சென்னையில் ரூ.2.23.

**கறிக்கோழி விலை**

பல்லடம் பிராய்லர்ஸ் ஒருங்கிணைப்புக் குழு புதன்கிழமை அறிவித்த கறிக்கோழியின் பண்ணைக் கொள்முதல் விலை கிலோ ரூ.75, முட்டைக் கோழி கிலோ ரூ.40.

**வெங்கடபதி ரெட்டியாருக்கு வேளாண் வித்தகர் பட்டம்**

First Published : 31 Mar 2011 09:04:52 AM IST

புதுச்சேரி, மார்ச் 30: புதுச்சேரி கூடப்பாக்கத்தைச் சேர்ந்த விவசாய விஞ்ஞானி வெங்கடபதி ரெட்டியாருக்கு சென்னை கேளம்பாக்கத்தில் உள்ள ஜே பண்ணை வேளாண் வித்தகர் என்ற பட்டத்தை வழங்கியுள்ளது.

÷வேளாண் விஞ்ஞானி எஸ்.எஸ். நாகராஜன் இப்போது ஜே பண்ணையின் தலைவராக இருக்கிறார். 1962-ல் பிலிப்பைன்ஸ் நாட்டில் இருந்து தருவிக்கப்பட்ட புதிய நெல் விதை ரகங்களை வெங்கடபதி ரெட்டியாரிடம் நாகராஜன் கொடுத்து சாகுபடி செய்யச் சொன்னார்.

÷இதிலிருந்து கிடைத்த நெல் விதைகளில் இருந்து புதுச்சேரி, தமிழ்நாடு விவசாயிகள் பயன் அடைந்தனர். கனகாம்பரத்திலும் புதிய இனங்களை உருவாக்கியவர். புதிய சவுக்கு ரகத்தையும் உருவாக்கியுள்ளார். இவருடைய சாதனையைப் பாராட்டி பல்கலைக் கழகங்கள், மத்திய, மாநில அரசுகள் பல விருதுகளை அளித்துள்ளன.

÷முன்னாள் குடியரசுத் தலைவர் அப்துல்கலாம் இவரைப் பாராட்டியுள்ளார். இந்நிலையில் ஜெ. பண்ணை இவருக்கு வேளாண் வித்தகர் என்ற பட்டத்துக்கான சான்றிதழ், பண முடிப்பு ரூ.30 ஆயிரம் வழங்கி கெப்ரவித்தது. அண்மையில் சென்னையில் நடந்த விழாவில் ஜெ. பண்ணையின் தலைவர் எஸ்.எஸ். நாகராஜன் இதை வழங்கினார்.

தினமலர்

**வெயிலின் தாக்கத்தால் மா பிஞ்சு உதிர்வு விலை கிடைக்காததால் கவலை**

பதிவு செய்த நாள் : ஏப்ரல் 01,2011,02:35 IST

ப.வேலூர்: கோடை வெயிலின் தாக்கம் காரணமாக ஜேடர்பாளையம் சுற்றுவட்டாரத்தில் உள்ள மா மரங்களில், சிறிய பிஞ்சு நிலையில் மாங்காய்கள் உதிர்வதால், அவற்றுக்கு சரியான விலை கிடைக்காத நிலை ஏற்பட்டுள்ளது. இது மா விவசாயிகளை கவலையடையச் செய்துள்ளது. ப.வேலூர் அருகே ஜேடர்பாளையம் அதன் சுற்றுவட்டார காவிரிக் கரையோர கிராமப்புறங்களில், மா விவசாயம் கணிசமான அளவில் மேற்கொள்ளப்படுகின்றன. ஏறத்தாழ, 50 ஏக்கர் பரப்பளவில் மா தோட்டம் உள்ளது. அங்கு உற்பத்தி செய்யப்படும் மாங்காய், உறுகாய் தயார் செய்வதற்காக அதிகளவு விற்பனை செய்யப்படுகின்றன.

நாமக்கல், சேந்தமங்கலத்தில் கூடும் மாங்காய் கமிஷன் மண்டிக்கு அவை கொண்டு வந்து விற்பனை செய்யப்படுகிறது. மார்ச் மாதம் இரண்டாவது வாரம் துவக்கம் முதல் கோடையின் தாக்கம் அதிகம் உள்ளது. வெயிலின் தாக்கம் அதிகம் காரணமாக பகல் பொழுதில் வாகனப் போக்குவரத்து, மக்கள் நடமாட்டம் குறைந்து காணப்படுகிறது. நாளுக்கு நாள் கோடை வெயிலின் தாக்கம் அதிகரித்தும் வருகிறது. அதன் எதிரொலியாக ஜேடர்பாளையம் சுற்றுவட்டாரத்தில் உள்ள மா மரங்களில் காய்கள், சிறிய பிஞ்சுகளாக இருக்கும்போது உதிர்ந்து விடுகின்றன. நன்கு விளைந்த மாங்காய் கிலோ 30 ரூபாய் முதல் 40 ரூபாய் வரை விற்பனை செய்யப்படும் நிலையில், உதிர்ந்த மாங்காய்கள் குறைந்த விலைக்கு விற்பனையாவது, விவசாயிகளை கவலையடையச் செய்துள்ளது

**மா அறுவடைக்குப்பின் தொழில்நுட்பம்**

பதிவு செய்த நாள் : ஏப்ரல் 01,2011,01:56 IST

தர்மபுரி: மா முன்பருவ அறுவடை துவங்கியுள்ளதால் விவசாயிகள் போதிய தொழில்நுட்ப முறைகளை கடைபிடிக்குமாறு வேளாண்துறை அறிவுறுத்தியுள்ளது.
வேளாண் அலுவலர் தாம்சன் வெளியிட்ட அறிக்கை: மாவில் முன்பருவ சீசன் துவங்கியுள்ளதால், விவசாயிகள் அறுவடைக்கு தயாராகி வருகின்றனர். அறுவடையின் போது மாங்காயின் காம்பு தளர்ச்சி அடைந்து இருக்க வேண்டும். மா தோலின் நிறம் கரும் பச்சையில் இருந்து லேசாக பச்சையாக மாறியும், சதைப்பற்று லேசாக மஞ்சள் நிறமாக மாறியிருக்கும் நிலையில் அறுடை பணிகள் துவக்கப்பட வேண்டும். அறுவடை செய்த மாவை தரம் பிரித்து பிளாஸ்டிக் கிரேட்களில் அடுக்கி சந்தைக்கு எடுத்து செல்ல வேண்டும். விற்பனைக்கு ஏற்ப பழம் பழுக்க வைக்கும் கட்டமைப்பு வசதிகளை பயன்படுத்த வேண்டும்.

மா அறுவடை நேர்த்திகள்: மாவின் காம்பை 10 முதல் 20 செ.மீ., தூரம் விட்டு மா அறுவடை செய்யும் கருவி மூலம் அறுவடை செய்ய வேண்டும். இந்த முறையால் மாவின் பால் மா பழத்தோலின் மீது விழாமல் பாதுகாக்கப்படும். பால் தோலில் பட்டால் அந்த பகுதியில் கரும்புள்ளிகள் விழுந்து பழம் கெட்டு விடும். மா பழங்களை அறுவடை செய்யும் போது பழங்கள் கீழே விழுந்து காயம் அடையாமல் இருக்க வலையுடன் கூடிய அறுவடை கருவிகள் மூலம் அறுவடை செய்ய வேண்டும். மா பழங்களை அறுவடை செய்தவுடன் நேரடியாக சூரிய ஒளியில் படும்படி வைப்பதை தவிர்த்து, குளிர்ச்சியான இடங்களில் வைக்க வேண்டும்.
சாக்கு பை, கூடைகள் ஆகியவற்றில் மாம்பழங்களை வைக்க கூடாது. இதனால், பழங்கள் காயம் அடைய வாய்ப்பு உண்டு. பிளாஸ்டிக் கிரேட்சில் பழங்களை சேகரிக்க வேண்டும். காலை நேரத்தில் மா பழங்களை அறுவடை செய்து நிழல் பகுதியில் சேகரிக்க வேண்டும்.
வரையறுக்கப்பட்ட பேக்கிங் முறைகளை கையாண்டு ஒரே வரிசையில் ஒரே தரத்தில் பழங்களை காட்டன் அட்டை பெட்டிகளில் அடைக்க வேண்டும்.

மா பழங்களை காம்புடன் அறுவடை செய்தவுடன் அதில் வடியும் பால் மா பழங்களின் மேல் படாமல் இருக்க காம்பு பகுதி கீழ் புறமாக இருக்கும்படி பிரத்தியோக வலை பின்னப்பட்ட பகுதியில் (மூங்கில் தட்டி) 10 நிமிடம் வைத்து இருக்க வேண்டும். இதனால், மா பால் பழங்களில் மீது படாமல் தவிர்ப்பதால் பழ அழுகளில் இருந்து கட்டுப்படுத்த முடியும். மா பழங்களை 40க்கு 30 சைஸ் 10 செ.மீ., அளவு கொண்ட காட்டன் அட்டை பெட்டிகளில் ஒரே தரம் உள்ளவையாக அடுக்க வேண்டும். இந்த தொழில்நுட்ப முறைகளை விவசாயிகள் கடைபிடிப்பதன் மூலம் பழங்கள் அழுகள் மற்றும் சேதங்களில் இருந்து பாதுகாப்பாகவும், வாடிக்கையாளர்களை கவரும் வகையில் இருக்கும். பழங்களின் தரம் மற்றும் கவரும் விதத்தை பொருத்து மார்க்கெட்டில் சந்தை விலை நிர்ணயிக்கப்படுவதால் விவசாயிகளும் கூடுதல் லாபம் பெற முடியும். இவ்வாறு அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

**தக்காளி விலை கடும் வீழ்ச்சி**

பதிவு செய்த நாள் : ஏப்ரல் 01,2011,02:11 IST

ஓசூர்: சூளகிரியில் தக்காளி கிலோ 50 பைசாவுக்கு கடும் வீழ்ச்சியடைந்ததால் விரக்தியடைந்த விவசாயிகள் விற்பனைக்கு கொண்டு வந்த தக்காளிகளை சாலையோரம் வீசி சென்ற சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. கிருஷ்ணகிரி மாவட்டத்தில் தமிழகத்தில் அதிகளவு காய்கறிகள் உற்பத்தி செய்யப்படுகிறது. குறிப்பாக ஓசூர், தேன்கனிக்கோட்டை தாலுகாவில் அனைத்து வகை காய்கறிகளும் உற்பத்தி செய்து விவசாயிகள், வெளிமாநிலங்களுக்கும், தமிழகத்தின் பிற மாவட்டங்களுக்கும் ஏற்றுமதி செய்கின்றனர்.

கடந்த சில மாதத்திற்கு முன் சூறாவளி காற்றுடன் கூடிய மழையால் தக்காளி ஒரு ரூபாய்க்கு கடும் வீழ்ச்சியடைந்தது. அதன்பின் தக்காளி விலை ஒரளவு உயர்ந்தது. கடந்த வாரம் வரை கிலோ 5 ரூபாய் வரை காணப்பட்டது.

கடந்த சில நாளாக கிலோ 3 ரூபாய் வரை விற்றது. சூளகிரி காய்கறி மார்க்கெட்டில் நேற்று திடீரென்று மொத்த காய்கறிகள் சந்தைகளில் கிலோ 50 பைசாவுக்கு விற்பனையானது. 25 கிலோ கொண்ட ஒரு பெட்டி தக்காளி வெறும் 20 ரூபாய்க்கும் விற்பனையாது. அதிர்ச்சியடைந்த விவசாயிகள் விற்பனைக்கு கொண்ட வந்த தக்காளியை விரக்தியில் விற்பனை செய்யாமல் சாலையோரம் வீசி சென்றனர். ஏராளமான விவசாயிகள் விலை வீழ்ச்சியால் விளைநிலங்களில் தக்காளியை அறுவடை செய்யாமல் போட்டு விட்டனர்.

அதனால், விவசாய நிலங்களில் தக்காளி பழங்கள் அழுகி கீழே உதிர்ந்து வருகிறது. இதுகுறித்து வேளாண்துறை அதிகாரிகள் கூறுகையில், ""உற்பத்தி அதிகரிப்பால் தக்காளி விலை வீழ்ச்சியடைந்துள்ளது; இந்த விலை வீழ்ச்சி வரும் மே மாதம் சரியாகிவிடும் வாய்ப்புள்ளது, " என்றனர். சூளகிரி தியாகரசனப்பள்ளியை சேர்ந்த விவசாயி மாரேகவுடு கூறுகையில், ""கடந்த ஆறு மாதமாக தக்காளி விவசாயிகளுக்கு கட்டுப்பாடியான விலை கிடைக்கவில்லை. ஒன்று மழை மற்றும் நோயால் அழிந்து விடுகிறது அல்லது விலை வீழ்ச்சியால் நஷ்டமடைகிறோம். அதனால், சாகுபடி செய்த முதலீட்டை கூட எடுக்க முடியாமல் பாதிக்கப்பட்டுள்ளோம், " என்றார்.

**மிளகாய் வத்தல் வரத்து அதிகரிப்பு: விலை வீழ்ச்சி**

பதிவு செய்த நாள் : மார்ச் 31,2011,21:56 IST

ராஜபாளையம் : மிளகாய் வத்தல் வரத்து அதிகரித்ததால், கொள்முதல் விலை குறைந்து கொண்டே வருகிறது. அடுத்த ஆறு மாதங்களில் விலை அதிகரிக்கும் என வியாபாரிகள் எதிர்பார்க்கின்றனர். ராஜபாளையம் மார்க்கெட்டில் பிப்ரவரியில் மிளகாய் வத்தல் விலை குவிண்டாலுக்கு 9000 முதல் 9900 வரை இருந்தது.

பின், தமிழகம் மற்றும் ஆந்திராவில் இருந்து மிளகாய் வத்தல் வரத்து அதிகரித்ததால், வாரத்திற்கு ஒரு முறை விலை குறைந்துகொண்டே வந்தது. தற்போது குவிண்டால் 6,000 முதல் 7,200 வரை குறைந்து உள்ளது. இந்த விலை மேலும் குறையும் என எதிர்பார்க்கப்படுகிறது. வியாபாரி ஜெயராம் கூறியதாவது: தற்போது உள்ள விலையில் இருந்து 500 ரூபாய் வரை குறைய வாய்ப்பு உள்ளது.

இன்னும் சில மாதங்களுக்கு இந்நிலை தொடரும். அடுத்த ஆறு மாதங்களில் 10 ஆயிரம் முதல் 13 ஆயிரம் ரூபாய் வரை விலை அதிகரிக்க வாய்ப்பு உள்ளது. காரணம் ஆந்திராவில் டிசம்பரில் பெய்த மழையால் உற்பத்தியில் 30 சதவீத மிளகாய் வத்தல் சேதமானது. மீதமுள்ள 70 சதவீதத்திலும் 20 சதவீதம் சோடையாகிவிட்டது. மேலும் உலக அளவில் மிளகாய் வத்தல் தேவை அதிகரிக்கும், இதனால் உள்நாடு மற்றும் வெளிநாடுகளில் நல்லவிலை கிடைக்கும், என்றார்.

**அறிவியல் ஆயிரம்**

பதிவு செய்த நாள் : ஏப்ரல் 01,2011,00:00 IST

**வெங்காயம் பதப்படுத்துதல்**

வெயில் காலத்தில், வெங்காயத்தின் விலை குறையும். வெங்காய வடகம், தாளித வடகம் என்ற பெயரில் வெங்காயத்தை வீணாக்காமல் பதப்படுத்துவர்.எனினும் வெங்காயம் பதப்படுத்துதலில் எதிர் பார்த்த இலக்கினை நாம் அடையவில்லை. விரைவில் அழுகக்கூடிய பொருட்களில் ஒன்றாக வெங்காயம் உள்ளது. இதனால் வெங்காயம் விளையாமலும் கெட்டது, விளைந்தாலும் விலை இல்லாமல் கெட்டது என்ற நிலை உள்ளது.

வெங்காய உற்பத்தியில் இந்தியா தான் முதலிடத்தில் உள்ளது. இரண்டாவது இடத்தில் சீனாவும், மூன்றாவது இடத்தில் ஆஸ்திரேலியாவும், நான்காவதாக அமெரிக்காவும் உள்ளது. ஆனால் வெங்காயத்தை அதிகம் பயன்படுத்தும் நாடாக அமெரிக்கா தான் உள்ளது. இந்தியாவில் சிவப்பு, வெள்ளை வெங்காயத்தை மட்டுமே பார்த்து உள்ளோம். ஆனால் மஞ்சள் நிறத்திலும் வெங்காயம் உள்ளது.

**வெளிநாடுகளில் தேவை அதிகரிப்பு :நறுமண பொருள்கள் ஏற்றுமதி ரூ.6,000 கோடியாக வளர்ச்சி**

ஏப்ரல் 01,2011,03:34



புதுடில்லி:உலகின் பல்வேறு நாடுகளில், இந்திய நறுமணப் பொருள்களுக்கு தேவைப்பாடு அதிகரித்து வருகிறது. இதையடுத்து, சென்ற 2010-11ம் நிதியாண்டின், ஏப்ரல் முதல் பிப்ரவரி வரையிலான காலத்தில், இவற்றின் ஏற்றுமதி, 4 லட்சத்து 71 ஆயிரத்து 165 டன்னாக அதிகரித்துள்ளது. இது, சென்ற நிதியாண்டின் இதே காலத்தில், 4 லட்சத்து 53 ஆயிரத்து 495 டன்னாக இருந்தது.இதே காலத்தில், நறுமணப் பொருள்கள் ஏற்றுமதி, மதிப்பின் அடிப்படையில், 5,058 கோடி ரூபாயிலிருந்து 6,031 கோடி ரூபாயாக வளர்ச்சி கண்டுள்ளது. ஆக, இவற்றின் ஏற்றுமதி, ரூபாய் மதிப்பின் அடிப்படையில், 19 சதவீத அளவிற்கும், அளவின் அடிப்படையில், 4 சதவீத அளவிற்கும் உயர்ந்துள்ளது என, இந்திய நறுமணப் பொருள்கள் வாரியம் வெளியிட்டுள்ள புள்ளி விவரத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மொத்த நறுமணப் பொருள்கள் ஏற்றுமதியில், இஞ்சி, பூண்டு, மிளகாய், வெந்தயம், போன்றவை மிக அதிகளவில் ஏற்றுமதியாகி உள்ளன. குறிப்பாக, சென்ற நிதியாண்டின், முதல் 11 மாத காலத்தில், இஞ்சி ஏற்றுமதி, அளவின் அடிப்படையில், 5,100 டன்னிலிருந்து, 12 ஆயிரம் டன்னாக, இரண்டு மடங்கிற் கும் மேல்அதிகரித்துள்ளது.இதன் மதிப்பு, 41.51 கோடி ரூபாயிலிருந்து, 77.29 கோடி ரூபாயாக உயர்ந்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. இதே

காலத்தில், மிளகு ஏற்றுமதி, அளவின் அடிப்படையில், 18 ஆயிரத்து 425 டன்னிலிருந்து, 16, ஆயிரத்து 600 டன்னாக குறைந்துள்ளது.

என்றாலும், மதிப்பின் அடிப்படையில், இதன் ஏற்றுமதி, 293 கோடி ரூபாயிலிருந்து 334.62 கோடி ரூபாயாக அதிகரித்துள்ளது.சிறிய ஏலக்காய் ஏற்றுமதி, அளவின் அடிப்படையில், 1,765 டன்னிலிருந்து 865 டன்னாக குறைந்துள்ளது. மதிப்பின் அடிப்படையிலும் இதன் ஏற்றுமதி, 143.62 கோடி ரூபாயிலிருந்து, 100.41 கோடி ரூபாயாக சரிவடைந்துள்ளது. இருப்பினும், பெரிய வகை ஏலக்காய் ஏற்றுமதி, அளவின் அடிப்படையில், 795 டன்னிலிருந்து, 700 டன்னாக குறைந்திருந்த நிலையில், மதிப்பின் அடிப்படையிலான இதன் ஏற்றுமதி, 13.43 கோடி ரூபாயிலிருந்து, 38.85 கோடிரூபாயாக அதிகரித்துள்ளது.

மிளகாய் ஏற்றுமதி, இதே காலத்தில், அளவின் அடிப்படையில், 1 லட்சத்து 80 ஆயிரத்து 750 டன்னிலிருந்து 2 லட்சத்து 18 ஆயிரத்து 500 டன்னாக உயர்ந்துள்ளது. இதன் மதிப்பு, 1,157 கோடி ரூபாயிலிருந்து 1,379 கோடி ரூபாயாக வளர்ச்சி கண்டுள்ளது.மஞ்சள் ஏற்றுமதி, 46 ஆயிரத்து 575 டன்னிலிருந்து, 42 ஆயிரத்து 500 டன்னாக குறைந்துள்ளது. ஆனால், மதிப்பின் அடிப்படையில் இதன் ஏற்றுமதி, 342.87 கோடி ரூபாயிலிருந்து, 608.85 கோடி ரூபாயாக அதிகரித்துள்ளது.தனியா ஏற்றுமதி அளவின் அடிப்படையில், 41 ஆயிரத்து 150 டன்னிலிருந்து 37 ஆயிரத்து 500 டன்னாக குறைந்துள்ளது. இதன் ஏற்றுமதி விலை குறைந்ததை அடுத்து, மதிப்பின் அடிப்படையிலான ஏற்றுமதியும், 202 கோடி ரூபாயிலிருந்து, 150 கோடி ரூபாயாக சரிவடைந்துள்ளது.

சர்வதேச சந்தையில், பூண்டின் விலை, அதிகரித்துள்ளது. கடந்த 2009-10ம் நிதியாண்டில், ஒரு கிலோ ஏற்றுமதிக் கான பூண்டின் விலை, 27.86 ரூபாயாக இருந்தது. இது, சென்ற நிதியாண்டில், 39.85 ரூபாயாக உயர்ந்துள்ளது. இதனால், மதிப்பின் அடிப்படையிலான இதன் ஏற்றுமதி, 28 கோடி ரூபாயிலிருந்து, 66.54 கோடி ரூபாயாக வளர்ச்சி கண்டுள்ளது. அளவின் அடிப்படையில் இதன் ஏற்றுமதி, 66 சதவீதம் அதிகரித்து, 10 ஆயிரத்து 50 டன்னிலிருந்து, 16 ஆயிரத்து 700 டன்னாக அதிகரித்துள்ளது.கரிமசாலா தூள் ஏற்றுமதி, 13 ஆயிரத்து 100 டன்னிலிருந்து, 13, 250 டன்னாக உயர்ந்துள்ளது. மதிப்பின் அடிப்படையில் இதன் ஏற்றுமதி, 173.30 கோடி ரூபாயிலிருந்து 178.75 கோடி ரூபாயாக உயர்ந்துள்ளது.

புதினா பொருள்கள் ஏற்றுமதி, இதே காலத்தில், 17 ஆயிரத்து 725 டன்னிலிருந்து, 16 ஆயிரத்து 250 டன்னாக குறைந்துள்ளது. ஆனால், மதிப்பின் அடிப்படையில், இதன் ஏற்றுமதி, 1,101 கோடி ரூபாயிலிருந்து, 1,542 கோடி ரூபாயாக உயர்ந்துள்ளது.நறுமண எண்ணெய் வகைகள் மற்றும் ஓலியோ ரெசின்ஸ் ஏற்றுமதி, அளவின் அடிப்படையில், 6,225 டன்னிலிருந்து, 6,800 டன்னாக உயர்ந்துள்ளது. மதிப்பின் அடிப்படையிலான இதன் ஏற்றுமதி, 651.68 கோடி ரூபாயிலிருந்து 803 கோடி ரூபாயாக அதிகரித்துள்ளது.

**உணவுப் பொருள் பணவீக்கம்: 9.5 சதவீதமாக குறைந்தது**

ஏப்ரல் 01,2011,03:32



புதுடில்லி:நாட்டின் உணவுப் பொருள்களுக்கான பணவீக்கம் மார்ச் 19ம் தேதியுடன் நிறைவடைந்த வாரத்தில், 9.50 சதவீதமாக குறைந்துள்ளது. இது, மார்ச் 12ம் தேதியுடன் முடிவடைந்த வாரத்தில், 10.05 சதவீதமாக இருந்தது.கணக்கீடு செய்வதற்கு எடுத்துக் கொள்ளப்பட்ட வாரத்தில், குறிப்பிட்ட சில பருப்பு வகைகள் விலை குறைந்திருந்தது. அதேசமயம், பழங்கள், காய்கறிகள் போன்றவற்றின் விலை உயர்ந்திருந்தது.

குறிப்பிட்ட பருப்பு வகைகளின் விலை 4.40சதவீதம் குறைந்திருந்தது. அதேசமயம், ஆண்டுக்கணக்கில், காய்கறிகளின் விலை 5.52 சதவீதம் உயர்ந்திருந்தது. இப்பிரிவின் கீழ், உருளைக்கிழங்கு 8.39 சதவீதம், வெங்காயம் 6.23 சதவீதம் விலை உயர்ந்திருந்தது. பழங்கள் விலை 24.67 சதவீதம் உயர்ந்திருந்தது.மேலும், முட்டை, இறைச்சி, மீன் வகைகள் 15.34 சதவீதம், பால் 5.79 சதவீதம் விலை உயர்ந்திருந்தது. கோதுமை விலையில், எவ்வித மாற்றமும் இல்லை.

சென்ற ஆண்டின், இதே வாரத்தில் உணவுப் பொருள்களுக்கான பணவீக்கம் 20.18 சதவீதம் என்ற அளவில் மிகவும் அதிகரித்திருந்தது.உணவுச் சாராத பொருள்களின் விலை, ஆண்டுக்கணக்கில், 26.18 சதவீதம் உயர்ந்திருந்தது.

இப்பிரிவின் கீழ், தாதுப் பொருள்கள் விலை 12.35 சதவீதம் என்ற அளவிலும், பெட்ரோலின் விலை 23.14 சதவீதம் என்ற அளவிலும் அதிகரித்திருந்தது.மொத்த விலை குறியீட்டு எண் அடிப்படையில் கணக்கிடப்படும் நாட்டின் பொது பணவீக்கம், சென்ற பிப்ரவரி மாதத்தில், 8.31 சதவீதமாக இருந்தது. சென்ற 2010ம் ஆண்டு, பிப்ரவரி மாதம் முதல் நாட்டின் பணவீக்கம், 8 சதவீதத்திற்கும் அதிகமாகவே உள்ளது.

**அதிக உற்பத்தியால் மிளகாய்விலை வீழ்ச்சி**
ஏப்ரல் 01,2011,03:32



குண்டூர்:உள்நாட்டில், மிளகாய் விலை குறைந்து வருகிறது. மிளகாய் அதிகளவில் விளையும் ஆந்திர மாநிலத்தில், இவ்வாண்டு உற்பத்தி உயர்ந்துள்ளது. குறிப்பாக, ஆந்திராவில், பிரகாசம் மாவட்டத்தில் ஒரு குவிண்டால் மிளகாய் விலை தற்போது 8,000 ரூபாயாக குறைந்துள்ளது.

சென்ற பிப்ரவரி மாதத்தில் இறுதியில் ஒரு குவிண்டால் மிளகாய் 10 ஆயிரம் ரூபாயாக இருந்தது. முன்பேர வர்த்தக சந்தையிலும் இதன் விலை 10 ஆயிரத்து 298 ரூபாயிலிருந்து 8,458 ரூபாயாக குறைந்துள்ளது.இதற்கிடையே, குண்டூர் மிளகாய் சந்தையிலும் இதன் விலை குறைந்துள்ளது. öŒன்ற செவ்வாய்க்கிழமை இச்சந்தைக்கு, ஒரு லட்சத்து 50 ஆயிரம் மூட்டை மிளகாய்வந்தது.

இதில், 79 ஆயிரத்து 794 மூட்டை மிளகாய் விற்பனை செய்யப்பட்டது. மீதமுள்ள 65 ஆயிரத்து 700 மூட்டைகள் கையிருப்பில் வைக்கப்பட்டுள்ளதாக வியாபாரிகள் தெரிவித்தனர்.கடந்த ஒரு

மாதத்திற்கு முன்பு ஒரு குவிண்டால் 9 ஆயிரம் ரூபாய்க்கு விற்பனை செய்யப்பட்ட குண்டூர் மிளகாய் தற்போது 8,500 ரூபாயாக குறைந்துள்ளது.

**கடல் உணவுப் பொருள்கள்ஏற்றுமதியில் பாதிப்பு**

ஏப்ரல் 01,2011,03:31



ஐதராபாத்:ஜப்பானில், சமீபத்தில் ஏற்பட்ட நிலநடுக்கம் மற்றும் சுனாமியால், இந்திய கடல் உணவுப் பொருள்கள் ஏற்றுமதியில் பாதிப்பு ஏற்பட்டுள்ளது, என கடல்பொருள்கள் ஏற்றுமதி மேம்பாட்டு ஆணையத்தின் உயரதிகாரி ஒருவர் தெரிவித்தார்.இந்தியாவிலிருந்து கடல் உணவுப் பொருள்கள் உலகின் பல நாடுகளுக்கு அதிகளவு ஏற்றுமதி செய்யப்பட்டு வருகிறது. கடந்த 2009-10ம் நிதியாண்டில், இவற்றின் ஏற்றுமதி முதல்முறையாக, 200 கோடி டாலராக (9,200 கோடி ரூபாய்) உயர்ந்திருந்தது. சென்ற நிதியாண்டின், முதல் ஒன்பது மாத காலத்தில், அதிகளவு ஏற்றுமதி செய்யப்பட்டதில், ஐரோப்பிய கூட்டமைப்பு நாடுகள் மற்றும் அமெரிக்காவுக்கு, அடுத்தபடியாக ஜப்பான் விளங்கியது. இந்நாட்டின், பங்களிப்பு 15 சதவீதமாக இருந்தது.இரு வாரங்களுக்கு முன்பு ஜப்பானில் ஏற்பட்ட நிலநடுக்கம் மற்றும் சுனாமியால் அந்நாடு மிகவும் பாதிப்புக்குள்ளானது. இந்த பாதிப்பிலிருந்து, டோக்கியோ மற்றும் ஒசாகா ஆகிய நகரங்களை தவிர, மற்ற நகரங்கள் இன்னும் இயல்பு நிலைக்கு திரும்பவில்லை. இதனால், அங்குள்ள சந்தைகளுக்கு குறைந்த அளவில் தான், கடல் உணவுப் பொருள்கள் அனுப்பப்பட்டு வருகின்றன.நிலநடுக்கம் மற்றும் சுனாமி தாக்கியதால், புகுஷிமா அணு உலை வெடித்து சிதறியது. இதிலிருந்து, வெளிவரும் கதிர்வீச்சு அபாயத்தினால், வடகிழக்கு கடலோர பகுதியில் உள்ள சந்தைகள் பாதிக்கப்பட்டுள்ளன. இருப்பினும், சரக்குகள் ஜப்பானுக்கு அனுப்பப்பட்டு வருகின்றன. ஆனால், அவை முறையாக பயன்படுத்தவில்லை. ஜப்பானில் உள்ள சில்லறை அங்காடிகள் இன்னும் இயல்பு நிலைக்கு திரும்பவில்லை. இவை, முழு இயல்பு நிலைக்கு திரும்ப

இன்னும் நான்கு அல்லது ஆறு மாதங்கள் வரை ஆகும் என எதிர்பார்க்கப்படுகிறது என, அவர் மேலும் தெரிவித்தார்.

**உற்பத்தி அதிகரிக்கும் என மதிப்பீடு கோதுமை ஏற்றுமதிக்கு அனுமதி அளிக்க திட்டம்**

ஏப்ரல் 01,2011,03:29



புதுடில்லி:நடப்பு ஆண்டில், நாட்டின் கோதுமை உற்பத்தி நல்ல அளவில் இருக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது. இதனால்,வரும் ஏப்ரல் அல்லது மே மாதங்களில் கோதுமை ஏற்றுமதிக்கு அனுமதி வழங்க திட்டமிடப்பட்டுள்ளதாக மத்திய வேளாண் இணை அமைச்சர் அருண் எஸ் யாதவ் தெரிவித்தார்.உள்நாட்டு தேவையை கருத்தில் கொண்டு, சென்ற 2007ம் ஆண்டு முதல் கோதுமை ஏற்றுமதிக்கு தடை விதிக்கப்பட்டது.தற்போது வரை இந்த தடை நீட்டித்து வருகிறது. நடப்பாண்டிற்கு, உள்நாட்டுக்கான கோதுமை தேவை குறித்து ஆராயப்பட்டு, அதன் பிறகு,இந்த ஏற்றுமதிக்கான தடை வரும் ஏப்ரல் அல்லது மே மாதத்தில் விலக்கி கொள்ளப்பட இருப்பதாக அமைச்சர் கூறியுள்ளார்.நடப்பு 2010-11ம் ஆண்டு கோதுமை பருவத்தில் (ஜூலை-ஜூன்), நாட்டின் கோதுமை உற்பத்தி முன் எப்போதும் இல்லாத அளவாக, 8.14 கோடி டன்னாக இருக்கும் என மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. இது, கடந்த 2009-10ம் ஆண்டின் இதே காலத்தில், இந்த உற்பத்தி 8.08 கோடி டன்னாக இருந்தது.நடப்பு ஆண்டில், மத்திய பிரதேசம் மற்றும் குஜராத் ஆகிய மாநிலங்களில் இருந்து 2.40 லட்சம் டன் கோதுமை கொள்முதல் செய்யப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.கடந்த ஆண்டில் இம்மாநிலங்களிலிருந்து, 4.93 லட்சம் டன் கோதுமை கொள்முதல் செய்யப்பட்டுள்ளது. நடப்பாண்டில் இது வரையில்,கோதுமை கொள்முதலில், இம்மாநிலங்களின் பங்களிப்பு குறைவாக உள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.மத்திய பிரதேசத்தில் இருந்து 1.57 லட்சம் டன் மற்றும் குஜராத் மாநிலத்தில்

இருந்து 40 டன் கோதுமை கொள்முதல் செய்யப்பட்டுள்ளது. மேலும், பஞ்சாப் மற்றும் ஹரியானா மாநிலங்களில், கோதுமை கொள்முதல் வரும் ஏப்ரல் 1ம் தேதி முதல் தொடங்கும் என இந்திய உணவு கழகம் தெரிவித்துள்ளது.பொதுவாக ரபி பருவத்தில் தான் கோதுமை அதிகளவில் விளைவிக்கப்படுகிறது. வரும் 2011-12ம் ஆண்டில் 2.62 கோடி டன் கோதுமை கொள்முதல் செய்ய இந்திய உணவு கழகம் இலக்கு நிர்ணயித்துள்ளது. சென்ற ஆண்டில் இக் கழகத்தின் கோதுமை கொள்முதல் 2.25 கோடி டன்னாக இருந்தது.நடப்பாண்டில்,கோதுமை கொள்முதல் ஏப்ரல் மற்றும் ஜூன் மாதங்களுக்கிடையில் இருக்கும் என, இந்திய உணவு கழகம் மேலும் தெரிவித்துள்ளது.

தினத் தந்தி DAILY THANTHI வெல்க தமிழ்

## *ஏப்ரல்–பிப்ரவரி மாத காலத்தில் நாட்டின் நறுமண பொருள்கள் ஏற்றுமதி 4 சதவீதம் அதிகரிப்பு*



*இக்கனாமிக் டைம்ஸ் செய்தி பிரிவு*

*கொச்சி*

*பிப்ரவரி மாதம் வரையிலான 11 மாத காலத்தில், மிளகாய், இஞ்சி, ஏலக்காய் உள்ளிட்ட நறுமண பொருள்கள் ஏற்றுமதி அளவின் அடிப்படையில் 4 சதவீதம் அதிகரித்து 4,71,165 டன்னாக உயர்ந்துள்ளது. இது, 2009–10–ஆம் நிதி ஆண்டின் முதல் 11*

மாதங்களில் 4,53,495 டன்னாக இருந்தது.

இலக்கை விஞ்சி சாதனை

நறுமண பொருள்கள் வாரியம் 2010–11–ஆம் நிதி ஆண்டில், 4.66 லட்சம் டன் அளவிற்கு நறுமண பொருள்களை ஏற்றுமதி செய்ய இலக்கு நிர்ணயம் செய்து இருந்தது. இந்நிலையில் முதல் 11 மாதங்களில் நறுமண பொருள்கள் ஏற்றுமதி முழு நிதி ஆண்டிற்கான இலக்கை விஞ்சி சாதனை படைத்துள்ளது. இது இந்திய நறுமண பொருள்களுக்கு வெளிநாடுகளில் தேவைப்பாடு அதிகரித்து வருவதை எடுத்துக் காட்டுகிறது. நறுமண பொருள்கள் ஏற்றுமதி வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்தது ஆகும். ஏற்றுமதி அதிகரிப்பதால் நாட்டின் அன்னியச் செலாவணி கையிருப்பு உயரும். நாட்டின் மொத்த ஏற்றுமதியில் நறுமண பொருள்களின் பங்களிப்பு 0.6 சதவீதம் என்ற அளவில் உள்ளது.

மிளகாய்

நறுமண பொருள்கள் ஏற்றுமதியில் 46 சதவீத பங்களிப்பை கொண்டுள்ள மிளகாய் ஏற்றுமதி, முதல் 11 மாதங்களில் 21 சதவீதம் அதிகரித்து 2,18,500 டன்னாக உயர்ந்துள்ளது. முந்தைய நிதி ஆண்டின் இதே காலத்தில் இது 1,80,750 டன்னாக இருந்தது.

விவசாயிகளுக்கு அதிக ஆதாயம் அளிக்கும் இஞ்சியின் ஏற்றுமதி இரண்டு மடங்கு அதிகரித்து 5,100 டன்னிலிருந்து 12,000 டன்னாக அதிகரித்துள்ளது. சமையலுக்கும் மருந்து தயாரிப்புக்கும் பயன்படும் பூண்டு ஏற்றுமதி 66 சதவீதம் அதிகரித்து 10,050 டன்னிலிருந்து 16,700 டன்னாக உயர்ந்துள்ளது. 11 மாதங்களில் 6,950 டன் பெருஞ்சீரகம் ஏற்றுமதி ஆகி உள்ளது. முந்தைய நிதி ஆண்டின் இதே காலத்துடன் ஒப்பிடும்போது இது 15 சதவீதம் (6,050 டன்) அதிகமாகும்.

புளி, பெருங்காயம், இலவங்கப்பட்டை, குங்குமப்பூ உள்ளிட்ட இதர நறுமண பொருள்கள் ஏற்றுமதி 14.36 சதவீதம் அதிகரித்து 18,800 டன்னிலிருந்து 21,500 டன்னாக அதிகரித்துள்ளது.

நறுமண பொருள்களில் அதிக பங்களிப்பைக் கொண்டுள்ள மிளகாய் ஏற்றுமதி 21 சதவீதம் வளர்ச்சி அடைந்துள்ள நிலையில், ஒரு சில நறுமண பொருள்கள் ஏற்றுமதி சரிவடைந்ததால் ஒட்டுமொத்தத்தில் நறுமண பொருள்கள் ஏற்றுமதியில் 4 சதவீதம் மட்டுமே வளர்ச்சி ஏற்பட்டுள்ளது.

ஏலக்காய்

கணக்கீடு செய்வதற்கு எடுத்துக் கொள்ளப்பட்ட 11 மாதங்களில் சிறிய ஏலக்காய் ஏற்றுமதி, 1,765 டன்னிலிருந்து 865 டன்னாக 50 சதவீதத்திற்கு மேல்

சரிவடைந்துள்ளது. சீரகம் ஏற்றுமதி 39 சதவீதம் சரிவடைந்து 44,800 டன்னிலிருந்து 27,500 டன்னாக வீழ்ச்சி அடைந்துள்ளது. வெந்தயம் ஏற்றுமதி 13.48 சதவீதம் சரிவடைந்து 19,650 டன்னிலிருந்து 17,000 டன்னாக மிகவும் குறைந்துள்ளது.

2010–11–ஆம் நிதி ஆண்டில் முதல் 11 மாதங்களில், மதிப்பு அடிப்படையிலான ஏற்றுமதி குறித்த புள்ளி விவரங்கள் இன்னும் வெளியிடப்படவில்லை. இருப்பினும் நிதி ஆண்டின் முதல் 10 மாதங்களில் டாலர் மதிப்பு அடிப்படையில் நறுமண பொருள்கள் ஏற்றுமதி, நிர்ணயிக்கப்பட்ட இலக்கைக் காட்டிலும் 7 சதவீதமும், ரூபாய் மதிப்பு அடிப்படையில் 8 சதவீதமும் அதிகரித்து இருந்தது. ஆக நாட்டின் நறுமண பொருள்கள் ஏற்றுமதி பல்வேறு அம்சங்களிலும் இலக்கையும் விஞ்சி அதிகரித்துள்ளது.

நல்ல விலை

முதல் 10 மாதங்களில் அளவின் அடிப்படையில் நறுமண பொருள்கள் ஏற்றுமதி 5 சதவீதம் மட்டுமே உயர்ந்திருந்த நிலையில், டாலர் மதிப்பு அடிப்படையில் 23 சதவீதம் அதிகரித்து இருந்தது. இது இந்திய நறுமண பொருள்களுக்கு வெளிநாடுகளில் நல்ல விலை கிடைத்து வருவதை எடுத்துக் காட்டுகிறது.

நறுமண பொருள்கள் ஏற்றுமதியை மேலும் அதிகரிக்கும் வகையில் நறுமண பொருள்கள் வாரியம் பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. இதனையடுத்து வரும் மாதங்களிலும் நறுமண பொருள்கள் ஏற்றுமதியில் விறுவிறுப்பு ஏற்படும் என வர்த்தக நிபுணர் ஒருவர் தெரிவித்தார்.

## வெங்காயம் ஏற்றுமதி விலை குறைக்கப்பட வேண்டும் வேளாண் அமைச்சகம் பரிந்துரை



இக்கனாமிக் டைம்ஸ் செய்தி பிரிவு

புதுடெல்லி

வெங்காயம் விளைச்சல் அதிகரித்து வருவதால், உள்நாட்டில் விலை குறைந்து வருகிறது.

எனவே ஏற்றுமதி வாயிலாக விவசாயிகள் ஆதாயம் அடையும் வகையில், வெங்காயம் ஏற்றுமதி மீதான குறைந்தபட்ச விலையை 225 டாலரிலிருந்து (ஒரு டன்) 175 டாலராக குறைக்க வேண்டும் என மத்திய வர்த்தக அமைச்சகத்தை வேளாண் அமைச்சகம் கேட்டுக் கொண்டுள்ளது.

மத்திய அரசு நிர்ணயிக்கும் ஏற்றுமதி விலையை குறைப்பதால், விவசாயிகள் குறைந்த விலையில் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்து இதர நாட்டு நிறுவனங்களின் போட்டியை முறியடிக்க முடியும்.

சென்ற ஆண்டு டிசம்பர் மாதத்தில் வெங்காயம் விலை விண்ணைத் தொடும் அளவிற்கு உயர்ந்ததையடுத்து வெங்காயம் ஏற்றுமதிக்கு தடை விதிக்கப்பட்டது. பின்னர் விளைச்சல் அதிகரித்து, விலை குறைந்ததையடுத்து, ஏற்றுமதிதடை நீக்கப்பட்டது. அதேசமயம் குறைந்தபட்ச ஏற்றுமதி விலை டன்னுக்கு 600 டாலராக நிர்ணயிக்கப்பட்டது. இந்நிலையிலும், ஏற்றுமதி அதிகரிக்காததால் ஏற்றுமதி விலை படிப்படியாக 225 டாலராக குறைக்கப்பட்டுள்ளது.

கடந்த இரண்டு மாதங்களில் புதுடெல்லியில் 100 கிலோ வெங்காயத்தின் மொத்த விலை ரூ.500 குறைந்துள்ளது. இதனால் ஏற்றுமதி விலையை மேலும் குறைக்க வேண்டும் என வேளாண் அமைச்சகம் தெரிவித்துள்ளது.

## உணவு பொருள் பணவீக்கம் 9.5 சதவீதமாக குறைந்தது



இக்கனாமிக் டைம்ஸ் செய்தி பிரிவு

புதுடெல்லி

பருப்பு வகைகள் விலை குறைந்ததால், மார்ச் 19-ந் தேதியுடன் நிறைவடைந்த வாரத்தில் உணவு பொருள் பணவீக்கம் 9.5 சதவீதமாக குறைந்துள்ளது. அதேசமயம் பழங்கள் மற்றும் காய்கறிகள், அசைவ உணவு பொருள்கள் விலை அதிகரித்துள்ளது.

தொடர்ந்து இரண்டு வாரங்களாக ஒற்றை இலக்க அளவிற்கு இருந்த உணவு பொருள் பணவீக்கம் மார்ச் 12–ந் தேதியுடன் நிறைவடைந்த வாரத்தில் 10.05 சதவீதமாக உயர்ந்து இருந்தது. தற்போது மீண்டும் ஒற்றை இலக்க அளவிற்கு குறைந்துள்ளது.

பருப்பு வகைகள்

கணக்கீடு செய்வதற்கு எடுத்துக் கொள்ளப்பட்ட வாரத்தில் ஓர் ஆண்டு கால அடிப்படையில் பருப்பு வகைகள் விலை 4.40 சதவீதம் குறைந்துள்ளது. அதேசமயம் உருளைக்கிழங்கு மற்றும் வெங்காயம் விலை முறையே 8.39 சதவீதம் மற்றும் 6.23 சதவீதம் உயர்ந்துள்ளது. ஒட்டுமொத்தத்தில் காய்கறிகள் விலை 5.52 சதவீதம் அதிகரித்துள்ளது.

பழங்கள் விலை 24.67 சதவீதம் அதிகரித்துள்ள நிலையில், முட்டை, மீன், இறைச்சி ஆகிய அசைவ உணவு பொருள்கள் விலை 15.34 சதவீதம் உயர்ந்துள்ளது. பால் விலை 5.79 சதவீதம் அதிகரித்துள்ளது. கோதுமை விலை நிலையாக உள்ளது. அதேசமயம் அரிசி விலை 2.94 சதவீதம் உயர்ந்துள்ளது. தானியங்கள் விலை 3.96 சதவீதம் அதிகரித்தது.

இதே வாரத்தில் உணவு அல்லாத பொருள்கள் பணவீக்கம் 26.18 சதவீதம் உயர்ந்துள்ளது. ஓர் ஆண்டுகால அடிப்படையில் கனிமங்கள் விலை 12.35 சதவீதமும், பெட்ரோல் விலை 23.14 சதவீத மும் உயர்ந்துள்ளது. விமான எரிபொருள் (7 சதவீதம்), இலகு ரக டீசல் ஆயில் (3 சதவீதம்), நாப்தா (1 சதவீதம்) விலையும் உயர்ந்துள்ளது. இதனையடுத்து எரிபொருள் பணவீக்கம் 12.79 சதவீதத்திலிருந்து 13.13 சதவீதமாக அதிகரித்துள்ளது.

பொது பணவீக்கம்

மொத்த விலை குறியீட்டு எண் அடிப்படையில் கணக்கிடப்படும் பொது பணவீக்கம் சென்ற பிப்ரவரி மாதத்தில் 8.31 சதவீதமாக உயர்ந்தது. பொது பணவீக்கத்தை கணக்கிடுவதில் உணவு பணவீக்கத்தின் பங்களிப்பு 14 சதவீதமாக உள்ளது.

உணவு பணவீக்கம் குறைந்து வருவதால் மார்ச் மாதத்தில் பொது பணவீக்கம் குறைய வாய்ப்புள்ளது என்று பொருளாதார நிபுணர் ஒருவர் தெரிவித்தார்.

**கரீஃப் பருவத்தில், நாடு முழுவதுமாக உரங்களுக்கான தேவைப்பாடு 2.88 கோடி டன்னாக உயரும்**



இக்கனாமிக் டைம்ஸ் செய்தி பிரிவு

புதுடெல்லி

நம் நாட்டில், நடப்பு ஆண்டு கரீஃப் பருவத்தில் (ஜூன்–அக்டோபர்), உரங்களுக்கான தேவைப்பாடு 2.88 கோடி டன்னாக அதிகரிக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது. இது, சென்ற ஆண்டின் இதே பருவத்தில் 2.77 கோடி டன்னாக இருந்தது. ஆக, எதிர்வரும் பருவத்தில் உரத் தேவை 4 சதவீதம் அதிகரிக்கும் நிலை உள்ளது.

கலப்பு உரங்கள்

இந்திய விவசாயிகள் யூரியா, டீ.ஏ.பி., எம்.ஓ.பி. மற்றும் பல்வேறு கலப்பு உரங்களை பயன்படுத்தி வருகின்றனர். வரும் கரீஃப் பருவத்தில் யூரியா உரத்திற்கான தேவை 1.42 கோடி டன்னாக இருக்கும் என தெரிகிறது. டீ.ஏ.பி. உரத்திற்கான தேவை 71.30 லட்சம் டன்னாகவும், எம்.ஓ.பி.க்கான தேவைப்பாடு 22.50 லட்சம் டன்னாகவும் இருக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது. கலப்பு உரங்கள் 52 லட்சம் டன் தேவைப்படும் என மதிப்பிடப்பட்டுள்ளது.

இது தவிர எஸ்.எஸ்.பி. எனப்படும் சிங்கிள் சூப்பர் பாஸ்பேட் உரத்திற்கான தேவை 25.30 லட்சம் டன்னாக இருக்கும் என மத்திய வேளாண் அமைச்சகத்தின் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார். கரீஃப் பருவத்தில் உரங்களுக்கான தேவைப்பாடு அதிகரிக்க உள்ள நிலையில், அதனை ஈடு செய்யும் வகையில் நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு மத்திய உர அமைச்சம் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது என அவர் மேலும் கூறினார்.

இறக்குமதி

*நடப்பு 2010–11–ஆம் நிதி ஆண்டில் நம் நாட்டில் உரங்களுக்கான தேவைப்பாடு 5 சதவீதம் உயர்ந்து 5.60 கோடி டன்னாக உயரும் என மதிப்பிடப்பட்டுள்ளது. இது, சென்ற நிதி ஆண்டில் 5.34 கோடி டன்னாக இருந்தது. கடந்த 2008–09–ஆம் நிதி ஆண்டில், 240 கோடி டாலர் மதிப்பில் 57 லட்சம் டன் உரங்கள் இறக்குமதி செய்யப்பட்டன.*

யூரியா உற்பத்தி

*இந்தியாவில் யூரியா உரமே மிக அதிகமாக பயன்படுத்தப்பட்டு வருகிறது. 2008–09–ஆம் ஆண்டில் நம் நாட்டில் யூரியாவிற்கான தேவைப்பாடு 2.66 கோடி டன்னாக இருந்தது. இது, சென்ற நிதி ஆண்டில் 2.82 கோடி டன்னாக உயர்ந்தது. அவ்வாண்டில் நாட்டின் யூரியா உற்பத்தி 2.20 கோடி டன்னாக இருந்தது. இது, 12–வது ஐந்தாண்டு திட்ட காலத்தில் 3 கோடி டன்னை தாண்டும் என மதிப்பிடப்பட்டுள்ளது.*

தினகரன்

**உணவு பணவீக்கம் 9.5% ஆக குறைவு**

பதிவு செய்த நாள் 4/1/2011 2:20:54 AM



புதுடெல்லி : கடந்த மார்ச் 19ம் தேதியுடன் முடிவடைந்த வாரத்தில் உணவு பணவீக்கம் 9.5 சதவீதமாகக் குறைந்தது. பருப்பு வகைகளின் விலை குறைந்ததே இதற்கு முக்கிய காரணம். உணவுப் பொருட்களின் விலை உயர்வு காரணமாக, உணவு பணவீக்கம் கடந்த ஓராண்டாக இரட்டை இலக்கத்தில் இருந்தது. குறிப்பாக கடந்த மார்ச் மாதத்தில் 20.18 சதவீதமாக இருந்தது.

இந்நிலையில் கடந்த பிப்ரவரி கடைசி வாரத்தில் ஒற்றை இலக்கத்துக்கு குறைந்தது. இரண்டு வாரங்கள் ஒற்றை இலக்கத்தில் நீடித்த இது, மார்ச் 12ம் தேதியுடன் முடிந்த வாரத்தில் மீண்டும் இரட்டை இலக்கத்தை (10.05%) தொட்டது. உணவு பணவீக்கம் மார்ச் 19ம் தேதியுடன் முடிந்த வாரத்தில் மீண்டும் ஒற்றை இலக்கத்துக்கு (9.5%) சரிந்துள்ளது. கடந்த ஆண்டின் இதே காலத்தோடு ஒப்பிடும்போது இந்த வாரத்தில் பருப்பு விலை 4.4 சதவீதம் குறைந்தது.

எனினும், காய்கறிகள் 5.52 சதவீதமும், பழங்கள் 24.67 சதவீதமும், இறைச்சி, முட்டை, மீன் ஆகியவை 15.34 சதவீதமும், பால் 5.79 சதவீதமும், அரிசி 2.94 சதவீதமும் உயர்ந்தது. கோதுமை விலையில் மாற்றம் இல்லை. ஒட்டுமொத்த பணவீக்கம் பிப்ரவரியில் 8.31 சதவீதமாக இருந்தது.

## மசாலா பொருள் ஏற்றுமதி 4% உயர்வு

பதிவு செய்த நாள் 4/1/2011 2:18:33 AM



மும்பை : நேற்றுடன் முடிந்த 2010&11ம் நிதி ஆண்டின் முதல் 11 மாதங்களில் (மார்ச் நீங்கலாக) மஞ்சள், மிளகாய், பூண்டு, இஞ்சி போன்ற மசாலா பொருட்கள் ஏற்றுமதி 4 சதவீதம் உயர்ந்துள்ளதாக இந்திய மசாலா பொருட்கள் வாரிய புள்ளி விவரம் தெரிவிக்கிறது. 2009&10ம் ஆண்டின் ஏப்ரல் & பிப்ரவரி வரை 4.53 லட்சம் டன் மசாலா பொருட்கள் ஏற்றுமதியாகின. அது கடந்த நிதி ஆண்டின் இதே காலத்தில் 4.71 லட்சம் டன்னாக உயர்ந்தது. இது 4 சதவீதம் அதிகம். மிளகாய் ஏற்றுமதி மட்டும் 2.18 லட்சம் டன் நடந்தது. அது 21 சதவீத உயர்வு. எனினும், மிளகு, சீரகம் உட்பட சில மசாலா பொருட்களின் ஏற்றுமதி கடந்த நிதி ஆண்டில் குறைந்துள்ளது.